# கள ஆய்வு தொடங்கும்.. சாதனைத் திட்டங்கள் தொடரும்..

## ‘உங்களில் ஒருவன்’... முதல் பக்கத் தொடர்ச்சி

என்னைச் சந்தித்தாலும் நாமக்கல் மாவட்டத்திற்கான கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றைக் கொடுத்திட மறக்க மாட்டார். நம் கழகத்தின் என் தாய்வீடான இளைஞரணியில் உருவானவர் ராஜேஸ்குமார் என்பதால் செயலில் தனி வேகம் இருக்கும். தனது மாவட்ட வளர்ச்சிக்கான திட்டங்களைத் தொடங்கி வைக்கவும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவும் நான் சென்றிருந்ததால் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

அவருடன் இணைந்து நாமக்கல் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்த மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் மதுரா செந்தில் அவர்களும் இளைஞரணியில் உருவானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொழில் வளர்ச்சி மிக்க நாமக்கல்லை 1997-இல் அன்றைய கழக ஆட்சியில் தனி மாவட்டமாக உருவாக்கியவர் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். மாவட்டம் தந்த அந்த மகத்தான தலைவரின் முழு வடிவிலான திருவுருவச் சிலையினை சிலம்பக்கவுண்டர் பூங்காவில் திறந்து வைப்பதற்காக சென்றபோது, வழிநெடுக வெள்ளமென மக்கள்.. மக்கள்.. மக்கள்! மூன்றாண்டுகால திராவிட மாடல் அரசின் ஒவ்வொரு திட்டத்தினாலும் பயன்பெற்ற மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் திரண்டு நின்று வரவேற்பளித்தனர். அவர்களின் முகங்களில் வெளிப்பட்ட மகிழ்ச்சியைக் கண்டேன்.

உங்களில் ஒருவனான என் மீதும், நம் அரசு மீதும் அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைக் கண்டேன். ஒவ்வொருவரிடமும் பேச வேண்டும் என்ற ஆவல் அதிகமானது. நடந்தபடியே அவர்களின் அன்பைப் பெற்றுக் கொண்டேன். கூட்டமாக மக்கள் நின்ற இடங்களில், சரியாகப் பார்க்க முடியவில்லை என்று அவர்கள் தெரிவித்ததால், காரின் கதவைத் திறந்து, கைப்பிடியைப் பிடித்து நின்றபடியே கையசைத்து அவர்களின் அன்பான வாழ்த்துகளைப் பெற்றேன். அவர்களில் பலர் தந்த கோரிக்கை மனுக்களையும் பெற்றுக்கொண்டேன்.

**திராவிட மாடல் அரசின் ஆட்சித் திறனையும் அதற்கு மக்கள் அளிக்கின்ற வரவேற்பையும் காண்பது போல கம்பீரத் திருவுருவச் சிலையாக உயர்ந்து நின்றார் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர்.**

மகிழ்வுடனும் மனநிறைவுடனும் நடைபெற்ற சிலைத் திறப்பு விழாவுக்குப் பிறகு, மதிய உணவை முடித்தபோது, நாமக்கல் மாவட்டத்தில் அண்மையில் சட்டம்-ஒழுங்கு பாதுகாப்புப் பணியினைச் செம்மையாக மேற்கொண்ட காவல்துறையினர் நினைவுக்கு வந்தனர்.

அண்டை மாநிலமான கேரளாவில் ஏ.டி.எம். மையங்களைக் கொள்ளையடித்துவிட்டு, தமிழ்நாட்டுக்குள் வந்த கொள்ளையர்களைப் பிடிப்பதில் திறமையாக செயல்பட்ட நாமக்கல் மாவட்ட காவல்துறையினரை ஏற்கெனவே பாராட்டி கடிதம் எழுதியிருந்தேன். டி.ஜி.பி. தலைமையிலான ஆலோசனைக் கூட்டத்திலும் பாராட்டியிருந்தேன். நாமக்கல் காவல் கண்காணிப்பாளர் ராஜேஷ்கண்ணன் தலைமையிலான தீரமிக்க காவல் துறையினரை நேரில் சந்தித்துப் பாராட்டினேன்.

நாமக்கல் மாவட்டத்தில் 19.50 கோடி ரூபாயில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தைத் திறந்து வைத்து பார்வையிட்டதுடன், பொம்மைக்குட்டைமேட்டில் நடைபெற்ற விழாவில் 16 ஆயிரத்து 31 பயனாளிகளுக்கு 146 கோடியே 56 இலட்ச ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினேன்.

ஆதிதிராவிடர் நலத்துறைக்குப் புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் மதிவேந்தன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

ஆதிதிராவிட மக்களின் நலனில் தொடர்ந்து அக்கறை செலுத்தி, அவர்கள் அனைவரும் முன்னேறுவதற்கான சமூக நீதித் திட்டங்களை நிறைவேற்றி வருவதுதான் திராவிட மாடல் அரசு. நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, துணை முதலமைச்சர் பொறுப்பினை வகித்த உங்களில் ஒருவனான நான் சட்டமன்றத்தில் ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த அருந்ததியர் இன மக்களுக்கான 3% உள்ஒதுக்கீட்டுத் தீர்மானத்தை முன்மொழியும் வாய்ப்பினைப் பெற்றேன். தலைவர் கலைஞர் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட அந்த இடஒதுக்கீடு, அண்மையில் உச்சநீதிமன்றத்தின் ஒப்புதலையும் பெற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், **கடந்த 15 ஆண்டுகளில் அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றம் கண்டிருப்பதைக் காணும் போது அவர்களுக்கான உள் ஒதுக்கீட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றும் வாய்ப்பைப் பெற்ற உங்களில் ஒருவனாகப் பெருமை கொள்கிறேன்.**

முதலமைச்சராக முதன்முறையாக நாமக்கல் சென்றபோது, அங்குள்ள அருந்ததியர் மக்களின் வசிப்பிடம் சென்று அவர்களின் நலன்களைக் கேட்டறிந்து, கோரிக்கைகளையும் கேட்டுக்கொண்டேன்.

அவற்றை நம் திராவிட மாடல் அரசு நிறைவேற்றித் தந்தமைக்கு அவர்கள் என்னிடம் நன்றியினைத் தெரிவித்துக்கொண்டனர்.

**சொன்னதைச் செய்வோம் என்ற முத்தமிழறிஞர் கலைஞர் நெறியிலும், சொல்லாமலும் செய்வோம் என்ற முறையிலும், நாமக்கல்லில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் உரையாற்றும்போது, திராவிட மாடல் ஆட்சியில் அறிவிக்கப்படும் திட்டங்கள் அனைத்தும் நிச்சயம் நிறைவேற்றப்படும் என்ற உறுதிமொழியினை வழங்கி, திட்டங்கள் செயல்படுத்தும் முறையைக் கண்காணிப்பதற்காக நவம்பர் மாதம் முதல் மாவட்டந்தோறும் நேரில் கள ஆய்வு செய்யவிருக்கிறேன்** என்பதையும் தெரிவித்தேன்.

விழாவில் திரண்டிருந்த மக்கள் மட்டுமின்றி, தமிழ்நாடு முழுவதும் நேரலையில் நிகழ்வைப் பார்த்த பொதுமக்களும் இந்த அறிவிப்புக்குப் பெரும் வரவேற்பை அளித்துள்ளனர். இந்தப் பயணத்தில் மாண்புமிகு அமைச்சர்கள் கே.என்.நேரு மற்றும் எ.வ.வேலு ஆகியோர் நான் துவக்கி வைத்த தங்களது துறை சார்ந்த நிகழ்ச்சிகளுக்காக நாமக்கல் மாவட்டத்திற்கு என்னுடனே வந்ததோடு, அத்தனை நிகழ்ச்சிகளை யும் முடித்துக்கொண்டு நான் சென்னை திரும்பும் வரையில் உடன் பயணித்தனர். திராவிட மாடல் அரசு தனது திட்டங்களை முழுமையாக நிறைவேற்றும் என்ற நம்பிக்கையுடன் உள்ள தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில், பண்டிகை நாட்கள் முடிவடைந்த பிறகு, நவம்பர் 5, 6 தேதிகளில் கோவைக்குச் சென்று கள ஆய்வினைத் தொடங்க இருக்கிறேன். மற்ற மாவட்டங்களிலும் தொடரவிருக்கிறேன். கள ஆய்வும் தொடரும், திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்களும் தொடரும்!

அரசு சார்ந்த பணிகளை மட்டும் தான் கவனிப்பீர்களா என்று உடன்பிறப்புகளான உங்களின் மனக்குரலை உங்களில் ஒருவனான நான் அறிவேன். **கள ஆய்வுப் பணிகளை அந்தந்த மாவட்டங்களில் நிறைவு செய்தபிறகு, கழகப் பணிகளையும் ஆய்வு செய்வேன். கண்மணிகளாம் உடன்பிறப்புகளையும் நேரில் கண்டு நெஞ்சம் மகிழ்வேன்.**

**அன்புடன்**

**மு.க.ஸ்டாலின்**

**திருவள்ளுவர் ஆண்டு 2055**
**ஐப்பசி 08,**
**25-10-2024.**

---

மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில்

# வெற்றி பெற்ற அணிகளுக்கு - முதலமைச்சர் கோப்பை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்புரை!

சென்னை, அக். 26-

“முதலமைச்சர் கோப்பை - 2024” மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு முதலமைச்சர் கோப்பையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (24.10.2024) சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற “முதலமைச்சர் கோப்பை-2024” மாநில அளவிலான போட்டிகள் நிறைவு விழாவில், அதிக பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் முதல் மூன்று இடங்களை பெற்ற சென்னை, செங்கல்பட்டு மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட அணிகளுக்கு முதலமைச்சர் கோப்பையை வழங்கி, பாராட்டினார்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் நமது பாரம்பரிய விளையாட்டான கபடி, சிலம்பம் உட்பட 36 வகையான விளையாட்டுகளுக்கு பள்ளி, கல்லூரி மாணாக்கர்கள், மாற்றுத்திறனாளிகள் பொதுப்பிரிவு மற்றும் அரசு ஊழியர்களுக்கும் போட்டிகள் நடத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். அதன் அடிப்படையில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் மண்டல அளவிலான போட்டிகள் ஆறு மண்டல தலைமையிடத்திலும், இந்த ஆண்டு செப்டம்பர் 10-ஆம் தேதி முதல் 24-ஆம் தேதி வரை நடைபெற்றது. 15 நாட்கள் நடைபெற்ற மாவட்ட மற்றும் மண்டல அளவிலான போட்டிகளில் கலந்துகொள்ள 11,56,566 வீரர், வீராங்கனைகள் இணையதளம் மூலம் பதிவு செய்தனர்.

மேலும், இப்போட்டிகளில் 10,000-க்கும் மேற்பட்ட போட்டி நடுவர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் இதர ஊழியர்கள் (Supporting Staffs) பணியாற்றினர். இப்போட்டிக்காக 83 கோடியே 36 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை 10.09.2024 அன்று சிவகங்கை மாவட்டத்தில் தொடங்கி வைத்தார்கள்.

மாவட்ட மற்றும் மண்டல அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற 32,700-க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள தேர்வு செய்யப்பட்டனர். துணை முதலமைச்சர் அவர்கள் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை 04.10.2024 அன்று சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கத்தில் தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் சென்னை, செங்கல்பட்டு, மதுரை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் நகரங்களில் அக்டோபர் 4-ஆம் தேதி முதல் அக்டோபர் 24-ஆம் தேதி வரை 19 இடங்களில் நடத்தப்பட்டன.

இந்த போட்டிகளில் பங்கேற்ற 32,700-க்கும் மேற்பட்ட வீரர்கள்- வீராங்கனைகள், 500 விளையாட்டு தன்னார்வலர்கள், 3,000-க்கும் மேற்பட்ட நடுவர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் இதர ஊழியர்கள் அனைவருக்கும் போட்டி நடைபெறுகின்ற அனைத்து நாட்களிலும் தங்குவதற்கு வசதியாக தங்கும் விடுதிகள் மற்றும் அரசு விருந்தினர் மாளிகை ஆகியவைகளில் அறைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

அத்துடன், போட்டி நடைபெறும் அனைத்து நாட்களிலும் மூன்று வேளை உணவு மற்றும் சிற்றுண்டி, வீரர் வீராங்கனைகள் போட்டி நடைபெறும் இடங்கள் மற்றும் தங்கும் விடுதிகளுக்கு செல்ல பேருந்து வசதிகள், அனைத்து இடங்களிலும் மருத்துவ வசதி ஏற்பாடுகள் மற்றும் போட்டி நடைபெறும் இடங்களில் காவல்துறை மூலம் உரிய பாதுகாப்பு ஆகியவை சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம், செங்கல்பட்டு, மதுரை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட நிர்வாகங்கள், மாநகர போக்குவரத்துக் கழகம், பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகிய துறைகளுடன் இணைந்து அனைத்து நடவடிக்கைகளும் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டன.

முதலமைச்சர் கோப்பை - 2024 மாநில அளவிலான இறுதிப் போட்டிகளில் 1,071 பதக்கங்களை வெல்வதற்கு தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களை சேர்ந்த வீரர்-வீராங்கனைகள் போட்டியிட்டனர். இதில் சென்னை மாவட்டம், 105 தங்கம், 80 வெள்ளி மற்றும் 69 வெண்கலப் பதக்கங்கள், என மொத்தம் 254 பதக்கங்கள் வென்று பதக்கப் பட்டியலில் முதல் இடத்தையும், செங்கல்பட்டு மாவட்டம், 31 தங்கம், 26 வெள்ளி மற்றும் 36 வெண்கலப் பதக்கங்கள், என மொத்தம் 93 பதக்கங்கள் வென்று இரண்டாம் இடத்தையும், கோயம்புத்தூர் மாவட்டம் 23 தங்கம், 40 வெள்ளி மற்றும் 39 வெண்கலப் பதக்கங்கள், என மொத்தம் 102 பதக்கங்கள் வென்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

“முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்-2024”ல் முதல் மூன்று இடங்களை பெற்ற சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்ட அணிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.10.2024) முதலமைச்சர் கோப்பைகளை வழங்கி, பாராட்டினார்.

இப்பரிசுக் கோப்பைகளை முதலிடத்தை பெற்ற சென்னை மாவட்ட அணியின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, அவர்களும், இரண்டாமிடத்தை பெற்ற செங்கல்பட்டு மாவட்ட அணியின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ். அருண்ராஜ், அவர்களும், மூன்றாமிடத்தை பெற்ற கோயம்புத்தூர் மாவட்ட அணியின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி, ஆகியோருடன் விளையாட்டு வீரர் - வீராங்கனைகள், மண்டல முதுநிலை மேலாளர்கள் மற்றும் மாவட்ட விளையாட்டு அலுவலர்களும் பெற்று கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநாகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, பாரா ஒலிம்பிக் போட்டியில் பதக்கங்கள் வென்ற தடகள விளையாட்டு வீரர் மாரியப்பன், டேபிள் டென்னிஸ் விளையாட்டு வீரர் சரத் கமல் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; “ நாட்டில் மத உணர்வுகளைத் தூண்டும் சதிகள் வளர்ந்து வருகின்றன” என்று ஒன்றிய பா.ஜ.க. அரசின் உள்துறை அமைச்சர் பேசியிருக்கிறாரே ?

**பெரியதம்பி : ஆமாம்தம்பி;தேசியகாவல்துறைநினைவிடத்தில் அப்படிப் பேசியிருக்கிறார். அது மட்டுமா? “பயங்கர வாதம், சைபர் கிரைம், ஆயுதக் கடத்தல், ட்ரோன்கள் மூலமான தாக்குதல், போதைப் பொருள்கள் கடத்தல்” போன்ற சமூகச் சீரழிவுச் செயல்கள் வளர்ந்து வருவதாகவும் அவர் பேசியிருக்கிறார்.**

**இந்தச் சீர்கேடுகளையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டியது யார்? அவர்தானே; அவர் வகிக்கும் ஒன்றிய உள்துறைதானே; ஒன்றிய பா.ஜ.க. அரசுதானே !**

**கட்டுப்படுத்த வேண்டியவரே இவ்வாறு வெளிப்படையாகக் கூறிப் புலம்பினால் என்ன பொருள் ?**

**ஒன்று; நிலைக் கண்ணாடி முன் நின்று, தன் முகத்தைப் பார்த்து, தன்னைப் பற்றி அவரே கொடுத்திருக்கும் ஒப்புதல் வாக்குமூலமாகத்தான் இதைக் கருத வேண்டும்.**

**அல்லது; ஒன்றிய அரசின் ஒட்டுமொத்த செயல்பாடுகளுக்குப் பொறுப்பேற்க வேண்டிய பிரதமரை, அவரது உள்துறை அமைச்சரே மறைமுகமாகக் குற்றம் சொல்வதாகக் கொள்ள வேண்டும் !**

**மல்லாந்து படுத்துக்கொண்டு, காறித் துப்பினால் யார் மீது விழும்?**